

ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 1 | ஜூன் 1996 | கானம் : 11

ஸ்ரீ ஹரி :

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 1 ஜுன் 1996 கானம் : 11

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 7 | 4 |
| 3. | ஸ்ரீ குருஜி - 10 | 6 |
| 4. | யுக தர்ம ஸ்தாபகர்கள் - 9 | 10 |
| 5. | ஸ்ரீ குருஜியுடன் பண்டரீபுர யாத்திரை | 15 |
| 6. | ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து - 10 | 23 |
| 7. | செய்திகள் | 28 |
| 8. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 30 |


முன் அட்டைப் படம் :

*பூனே அருகிலுள்ள தேஹு ரோடு - சரீரத்துடன் வைகுண்டம் சென்ற ஸ்ரீ துக்காராம் கோயிலில் ஸ்ரீ குருஜி*

பின் அட்டைப் படம் :

*சென்னை கே.கே. நகர் ஆஸ்தீக சமாஜம் ஆண்டு நிறைவு விழாவில் ஸ்ரீ குருஜியின் ப்ரவசனம்.*




சென்னை ஆதம்பாக்கம் ஸ்ரீ சங்கர கேந்திரம்
கைங்கர்ய ஸபாவில் உபன்யாஸம் நிகழ்த்தும் ஸ்ரீ குருஜி

ஸ்ரீ ஹரி :

# ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம் :

ராகம் : மோஹனம் தாளம் : ஆதி

*ராஜதி யதுவீர: த்வாரகாதீஷ:*
*ராஜதி யதுவீர:*

*ரக்ஷித ஸகல யாதவ குல ஜன:*
*சிக்ஷிதாஸுர கண பூபார நிவ்ருத்த:* *(ராஜதி)*

*ரத்ன மணிமய க்ரீட: ராஜீவ திவ்ய லோசன:*
*ரக்ஷித ஸகல ஸஜ்ஜன மண்டல: ருக்மிணி மானஸ*
*உல்லாசின: (ராஜதி)*

*திவ்ய பீதாம்பர தர: தீன வாத்ஸல்ய ஸ்வபாவ:*
*தீர பராக்ரம ஸ்வரூப: தர்ம ராஜ்ய பரிபாலக:* *(ராஜதி)*

*ஸுதாமா கடாக்ஷித ஸ்நேஹ வாத்ஸல்ய*
*ஸாது ஜன ஹ்ருதய வாஸின:*

*ஸமுத்ர மத்யே ராஜ்ய ஸ்தாபித:*
*ஸ்வர்ண முரளீ தாரித:* *(ராஜதி)*

---

**Photographs**

| | | |
|---|---|---|
| Front Wrapper | : | Sri Sridhar |
| Back Wrapper | : | Sri Y.V. Saravana Kumar |
| Page 2 | : | Sri R. Kalyana Krishnan |

# 7

தங்களிடம் வந்து குறைகளை யாராவது சொல்வார்களேயானால் அவர்களுக்கெல்லாம் குருஜி எந்தவிதமான, பிராயச்சித்தங்களையோ பரிகாரங்களையோ சொல்வது இல்லை. சௌக்யம் ஏற்படும் என்றோ பகவான் காப்பாற்றுவான் என்றோதான் கூறுவார். யாராவது எனக்கு அந்த வியாதி, இந்த வியாதி என்று கூறினாலும், சிரித்துக் கொண்டே கேட்டுக் கொண்டிருப்பார். 'எல்லாம் சரியாப் போயிடும்' என்றும் சில சமயங்களில் கூறுவார். இவைகளைப் பற்றி எழுதிக் கொண்டு வரும் பொழுது எனக்கு ஒன்று ஞாபகத்திற்கு வருகின்றது, பாபு என்ற ஒருவருக்கு குருஜி அனுக்ரஹம் செய்ததைப் பற்றி.

பாபு என்பவரின் குடும்பம் முழுவதுமே ஸ்ரீ குருஜியிடம் அனன்ய பக்தி உடையது. பாபு என்ற இவரும் ஸ்ரீ குருஜியிடம் அனன்ய பக்தி உடையவர். ஒரு சமயம் திடீர் என்று இவருடைய ஒரு கன்னத்தில் வீக்கம் ஏற்பட்டது. எவ்வளவோ வைத்தியம் செய்தும், வீக்கம் குறையவே இல்லை. மருத்துவர்கள் எவ்வளவோ வைத்தியம் செய்தும் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. சில மருத்துவர்கள் Plastic Surgery செய்து சரி செய்து விடலாம் என்று அபிப்ராயம் சொன்னார்கள். சிலர் இது Cancerஆகக் கூட இருக்கலாம், biapsis செய்து பார்க்க வேண்டும் என்று கூட சில மருத்துவர்கள் அபிப்ராயப்பட்டார்கள்.

ஸ்ரீ குருஜி பாபுவிடம் ஒரு ஹோமியோபதி டாக்டர் பெயரைக் கூறி அவரிடம் சென்று வைத்தியம் செய்து கொள்ள சொன்னார். அவரிடம் சென்று வைத்தியம் செய்து கொண்டவுடன் அதிசயமாக அந்த வீக்கம் குறைந்து விட்டது.

ஸ்ரீ குருஜியை தரிசனம் செய்ய ஒரு மாதுஸ்ரீ வருவார். அவருடைய கணவருக்கு ஸாதுக்கள், மஹாத்மாக்கள் போன்ற விஷயங்களில் நம்பிக்கை கிடையாது. ஆகவே அவர் அந்த மாதுஸ்ரீ ஸ்ரீ குருஜியின் ஸங்கத்துக்கு வருவதை விரும்பவில்லை. ஆனால் எவ்வளவுதான் அந்த மாதுஸ்ரீ எடுத்துச் சொல்லியும் அவரும் தரிசனத்திற்கு வருவதாக இல்லை.

ஒரு நாள் அந்த மாதுஸ்ரீ, ஸ்ரீ குருஜியிடம், ''தங்களுடைய ஸத் ஸங்கத்திற்கு போகக் கூடாது என்று கணவர் தடை விதிக்கின்றார். ஆகவே சில சமயங்களில் அவருடன் பெரியதாக சண்டை போட்டு விட்டுதான் வர வேண்டியுள்ளது. அல்லது சில சமயங்களில் அவருக்குத் தெரியாமல்தான் வரவேண்டியுள்ளது, நான் என்ன செய்வது என்றே தெரியவில்லை'' என்று கூறி அழுதார்.

அதற்கு ஸ்ரீ குருஜி ''அப்படி வருவது தவறு. ஆகவே வீட்டில் இருந்தபடியே நாம கீர்த்தனம் செய்து வரவும். நமக்குத்தான் நாம கீர்த்தனம் என்ற மார்க்கம் இருக்கின்றதே. அதை விடாமல் செய்து வரவும். பகவானுடைய சங்கல்பப்படிதான் அனைத்தும் நிகழ்கின்றன. ஒரு நாள் பகவான் தாங்கள் இருவரும் சேர்ந்து ஸத் ஸங்கத்திற்கு வரும்படி க்ருபை செய்வார்'' என்று கூறினார்.

அது போலவே சில காலம் கழிந்து அவர் கணவர் தானாகவே ''ஸ்ரீ குருஜியை தரிசனம் செய்து விட்டு வரலாமா?'' என்று கேட்டதும், அந்த மாதுஸ்ரீக்கு ஏற்பட்ட ஆனந்தத்திற்கு அளவே இல்லை. இப்பொழுது தம்பதிகளாக இருவரும் ஸத் ஸங்கத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள். அவர் இப்பொழுதெல்லாம் தன் மனைவி ஸத் ஸங்கத்தில் ஈடுபடுவதற்கு யாதொரு தடையும் சொல்வது இல்லை.

(தொடரும்)

***– ஜயந்தி ஜானகிராமன்.***

## ஸ்ரீ குருஜி - 10

ஸ்ரீ குருஜி அவர்களின் வாழ்க்கைச் சம்பவங்களை, அவர்கள் வாய்முகமாகச் சொல்ல, அவற்றைத் தொகுத்து எழுதும் தொடர் கட்டுரை.

**- எஸ். ஜயராம்**

---

பெரியவாளின் தரிசனம் இல்லாமல் இருக்கும் பொழுதெல்லாமும் மனது பெரியவாளையே நினைத்துக் கொண்டிருக்கும். எப்பொழுது காஞ்சீபுரம் சென்று பெரியவாளின் முன்பு நிற்கப் போகின்றோம் என்று ஒரே தவிப்பாக இருக்கும். பெரியவாளின் முன்பு போய் நின்றவுடன் மனதில் ஒரு இனம் புரியாத சாந்தி ஏற்படும். பெரிய வாளைப் பார்க்க ஏற்படும் தவிப்பும் அவரைத் தரிசனம் செய்தவுடன் ஏற்படும் அந்த ஆனந்தமும் தனி அலாதி தான். அதை அனுபவித்து பார்த்தால் தான் புரியும். அப்படி பல சமயங்களில் நான் பெரியவாளைத் தரிசனம் செய்யப் போகும் பொழுது என் கையில் காஞ்சீபுரம் செல்ல போதிய பணம் இருக்காது. சில சமயங்களில் காஞ்சீபுரம் போவதற்கு மட்டும்தான் பணம் இருக்கும். ஆனாலும் ஏதோ ஒரு தைரியத்தில் கிளம்பி


> ***"திடும் என்று ஒரு Van நாங்கள் எந்த விதமான சமிக்ஞையும் செய்யாத பொழுதும், எங்கள் அருகில் வந்து நின்றது. நாங்கள் மூவரும் அதில் ஏறிக் கொண்டோம். நாங்கள் எதுவும் சொல்லாத போதும் சரியாக காஞ்சீபுரம் மடத்து வாசலில் வண்டியை நிறுத்தினார்கள்.***

விடுவேன் பூவிருந்தமல்லி போய் பஸ்ஸிற்காக காத்துக் கொண்டிருப்பேன். திடீர் என்று என் அருகே ஒரு கார் வந்து நிற்கும். காஞ்சீபுரம் போக வேண்டுமா? எங்கள் காரில் ஏறிக்கொள்ளலாம் என்று அழைப்பார்கள்.

நானும் உடனே யோசிக்காமல் காரில் ஏறி விடுவேன். ஏறி உட்கார்ந்தவுடன் ஒரே கவலையாகிவிடும். இவர்கள் நம்மிடம் இறங்கியவுடன் ஏதாவது பணம் கேட்டால் என்ன செய்வது, நம்மிடம் அவர்களுக்குக் கொடுக்கும் அளவிற்கு பணம் இல்லையே என்று கவலை வந்துவிடும். குரு நாதரையே நினைத்துக் கொண்டும், அவருடைய பெயரைச் சொல்லிக்கொண்டும் உட்கார்ந்திருப்பேன். வண்டியிலிருந்து இறங்கியவுடன் அவர்கள் ஏதாவது பணம் கேட்பார்களே என்று பயமாக இருக்கும். ஆனால் அவர்கள் என்னிடம் எதுவும் கேட்காமல் போய் விடுவார்கள். இப்படி ஒரு முறை அல்ல, பல முறைகள் இது போல் நடந்து உள்ளன.

ஒரு சமயம் பெரியவாள் ஒரிக்கையில் தங்கியிருந்தார். அப்பொழுது அடிக்கடி சென்று தரிசனம் செய்து வந்தேன். பெரியவாள் தங்கியிருக்கும் பொழுது மிகவும் ரம்மியமாக இருந்தது. அங்கு ஒரு மாமரம் இருக்கும். அதன் அடியில் வந்து தரிசனத்திற்காக பெரியவாள் வந்து அமர்ந்து கொள்வார். பார்ப்பதற்கே மிகவும் ரம்மியாக இருக்கும். அந்த மாமரத்தினடியில் அவர் தரிசனம் அளித்துக் கொண்டிருக்கும் பொழுதே, அந்த மாமரத்தை அநேக முறை பிரதக்ஷிணம் செய்து விடுவேன்.

ஒரிக்கையில் பெரியவாள் முகாமிட்டிருந்த காலங்களில் அடிக்கடி தரிசனம் செய்து வந்தேன். ஒரு முறை எனக்குத் தெரிந்த இரு நண்பர்களை ஸ்வாமிகளின் தரிசனத்திற்கு அழைத்துச் சென்றேன். அதில் ஒருவர் அன்று இரவு அவசரமாக வெளியூர் செல்வதற்கு இருந்தார். ஆகவே எப்படியோ பஸ்ஸைப் பிடித்து அவசரம் அவசரமாக அந்தக் கிராமத்தை அடைந்தோம். ஆனால் ஒரு நாள் முன்புதான், ஸ்வாமிகள்


சங்கர மடம் ஓரிக்கை

அங்கிருந்து கிளம்பி காஞ்சீபுரம் சென்று விட்டதாக தெரிவித்தார்கள்.

என் கூட வந்தவருக்கு மிகவும் டென்ஷன் ஆகிவிட்டது. ஏன் என்றால் மீண்டும் சென்னை வந்து அன்று இரவே அவர் வெளி ஊருக்கு செல்வதாக இருந்தார். அங்கு பக்கத்திலிருந்து பெட்டிக் கடைக்காரரிடம் சென்று காஞ்சீபுரம் செல்ல எப்பொழுது பஸ் வரும் என்று விசாரித்தார். இப்பொழுதுதான் பஸ் சென்றது. இன்னும் இரண்டு மணி நேரம் ஆகும் அடுத்த பஸ் வருவதற்கு என்றார். என்னுடன் வந்தவர்க்கு மிகவும் கவலையாகி விட்டது. அவருக்கு ஒரு புறம் ஊருக்குச் செல்ல வேண்டும் என்ற கவலை. மறு புறம் இவ்வளவு தூரம் வந்து விட்டு ஸ்வாமிகளை தரிசனம் செய்ய முடியவில்லையே என்ற வருத்தமும் அவரிடம் இருந்தது.

என்னிடம் வந்து மிகவும் வருத்தப்பட்டார். நான் ''அவரிடம் கவலைப்படவேண்டாம். நிச்சயம் இன்று உங்களுக்கு ஆச்சார்யாளுடைய தரிசனமும் கிடைக்கும். இன்று நீங்கள் நிச்சயித்தபடியே ஊருக்கும் போக முடியும்'' என்று கூறினேன். ஆனால் அதற்கு அவர் என்னிடம் ''அது எப்படி முடியும்? கடைக்காரரிடம் விசாரித்தேன், சமீபத்தில் பஸ் வருவதற்கு வழியில்லை என்று கூறிவிட்டார் என்று புலம்பினார்.

இப்படியாகப் பேசிக் கொண்டிருக்கும் பொழுது திடும் என்று ஒரு Van வந்து நாங்கள் எந்த விதமான சமிக்ஞையும் செய்யாத பொழுதும் சரியாக எங்கள் அருகில் வந்து நின்றது. நாங்கள் மூவரும் அதில் ஏறி அமர்ந்து கொண்டோம். எங்களையும் அவர்கள் எதுவும் கேட்கவில்லை. நாங்களாகவும் எதுவும் சொல்லவில்லை. சரியாக காஞ்சீபுரம் மடத்து வாசலில் வண்டியை நிறுத்தினார்கள். நாங்கள் மூவரும் ஸ்வாமிகளை தரிசனம் செய்து விட்டு சென்னை வந்தோம். அன்று இரவு அவர் நிச்சயித்தபடியே ஊருக்கும் போய் சேர்ந்தார்.

(தொடரும்)

# யுக தர்ம ஸ்தாபகர்கள் - 9

## ஸ்ரீ ஸ்ரீதர ஐயாவாள் - தொடர்ச்சி

ஸ்ரீ ஸ்ரீதர ஐயாவாளின் எல்லையற்ற ஞானத்தைக் கண்டு பிரமித்தவரான பகவந்த ராயர், திவானும் தனது தமையனுமான ***த்ரியம்பக ராயரிடம்*** அவரைப் பற்றிக் கூறி, அவர் அனாயஸமாக செய்த கவிதைக்குத் தன்னால் அர்த்தமே கண்டு பிடிக்க இயலவில்லை என்றும் கூறினார். த்ரியம்பக ராயர் அந்த கவிதையைக் கூறுமாறு கேட்க ***'விலஸத் கன புஷ்ப புஷ்ப புஷ்பம்'*** என்ற ச்லோகத்தை பகவந்த ராயர் சொன்னார். திவான் கண்களை உயரே தூக்கி புருவத்தைக் கோணி அர்த்தம் காண முயன்றார். ஸ்ரீதரர் பால் பெரு மதிப்பு ஏற்பட்டது திவான் த்ரியம்பக ராயருக்கு.


மறு நாள் சபையில் மஹாராஜாவிடம் ஸ்ரீதரரின் பெருமைகளைக் கூறினார். அவர் நமது சபைக்கு வர வேண்டும் என்றும் கூறினார். இது கேட்ட அரசன், வித்வான்கள் இயல்பாக மற்ற வித்வான்களிடம் அஸூயை கொண்டிருப்பர். ஆனால் த்ரியம்பக ராயரின் இந்த விசித்ர மனோபாவத்தைப் பார்த்து சந்தோஷித்தார். அவரை தனது சபைக்கு அழைத்து வர, அரசவை பிரதானிகள் ஐவரை விண்ணப்ப ஓலையுடன் அனுப்பி தகுந்த ராஜ மரியாதைகளையும் உடன் அனுப்பினார்.

த்ரியம்பக ராயரோ, பகவந்த ராயர் ஸ்ரீதரரைப் பற்றிக் கூறியதிலிருந்து அவர் ஓர் சாதாரண பண்டிதர் மட்டுமல்ல, ராஜ ஸன்மானங்களுக்கு ஆசைப்படாதவர். விரக்த புருஷர் என்பதையும் புரிந்து கொண்டார். அதனால் அக்காலத்தில் தேவி உபாஸனையால் மிகவும் ப்ரஸித்தியடைந்தவரும் பரம விரக்தருமான ***ஸ்ரீ பாஸ்கர ராயர்*** அவர்கள் ஷஹாஜி மன்னனைப் போற்றி எழுதிய ச்லோகங்களையும் அரசவை

பிரதானிகள் மூலம் அனுப்பி வைத்தார். அதைப் பார்த்தால் நிச்சயமாக ஸ்ரீதரர் மஹாராஜாவின் ஆத்ம குணங்களைப் புரிந்து கொண்டு அவனது அழைப்பை மறுக்காமல் ஏற்பார் என்று நம்பிக்கையுடன் அனுப்பினார். திவானின் இந்த யூகம் வீணாகவில்லை என்பதும் உண்மையே. ராஜ ப்ரதிநிதிகள் திருச்சிராப்பள்ளி வந்து ஸ்ரீ ஸ்ரீதரரைச் சந்தித்து அரசனுடைய விண்ணப்பப் பத்ரத்தை அளித்ததுடன் த்ரியம்பக ராயர் அனுப்பிய ஸ்ரீ பாஸ்கர ராயரின் ச்லோகங்களையும் கொடுத்தனர்.

ஸ்ரீ ஸ்ரீதரரோ, பொதுவாக அரசர்கள் தனது சபைக்கு வரும் வித்வான்களைப் பூஜிப்பது தான் வழக்கம். ஆனால் இவ்வரசரோ வித்வான்கள் இருக்கும் ஊர் தேடி தனது சேவகர்களையனுப்பி சபைக்கும் அழைக்கும் விதம் மிகவும் புதுமையாகவும் ஆச்சர்யமாகவும் இருப்பதாகக் கருதினார். மேலும் த்ரியம்பக ராயர் அனுப்பி தஞ்சை மன்னன் ஷஹாஜி ராஜனை புகழ்ந்தெழுதிய ஒன்பது ச்லோகங்களைப் பார்த்து அதுவும் ஸ்ரீ பாஸ்கர ராயரால் எழுதப்பட்டது என்பதையும் அறிய ஸ்ரீதரர் அரசனின் ஆத்ம குணங்களில் மிகவும் திருப்தியடைந்தார். அவனைக் காணலாம் என்றும் தோன்றியது. இது அவனது பாக்யமே. ஸ்ரீதரருக்கு ஸ்ரீ போதேந்திராளை தரிசிக்கும் ஆவல் இருந்ததும் மற்றொரு முக்கிய காரணம்.

திருச்சியிலிருந்து தஞ்சை செல்லும் வழியில், தஞ்சை ராஜ்யத்தின் எல்லையான ***திருக்காட்டுப்பள்ளி*** எனும் ஊருக்கே அரசன் தனது பரிவாரத்துடன் ஸ்ரீ ஸ்ரீதரரை வரவேற்க வந்திருந்தார். மிகவும் அன்புடனும் மரியாதையுடன் ஸ்ரீ ஸ்ரீதரதரை அழைத்துச் சென்றார். மன்னரின் வினயம் ஸ்ரீ ஸ்ரீதரரை மிகவும் கவர்ந்தது. மன்னரின் திவான் த்ரியம்பக ராயரும் ஸ்ரீதரரைப் பார்த்ததும் அவரது அமானுஷ்ய தேஜஸில் மயங்கி விட்டார். தஞ்சை வந்ததும் அரசர் அளித்த மாளிகையில் ஸ்ரீதரர் சில காலம் தங்கியிருந்தார்.



ஸ்ரீ ஸ்ரீதரர் தஞ்சை சமஸ்தானத்திற்கு வந்ததை அறிந்த பண்டிதர்கள் பலர் அவரைக் காண திருவிசலூரிலிருந்து தஞ்சைக்கு வந்தனர். ஷஹாஜி மன்னர் ஸ்வயமே ஓர் வித்வானாக இருந்ததால் இத்தனை வித்வான்களையும் அவர்களில் தனிப்பொலிவுடன் விளங்கும் ஸ்ரீதரரையும் கண்டதும் குதூஹலித்தார். வித்வான்கள் கூடியதும் அது ஓர் பெரிய வித்வத் ஸதஸாகவே அமைந்துவிட்டது.

திருவிசலூரிலிருந்து வரும் வித்வத் ஸமூஹம் யாக யக்ஞங்களில் மிக்க ஈடுபாடு கொண்டது. கர்ம காண்டத்தில் சொல்லப்பட்ட பல யாகங்களையும் அனுஷ்டித்தவர்கள் அந்த வித்வான்கள், யக்ஞானுஷ்டானத்தாலேயே பிறவிப் பயன் எய்தியதாகக் கருதுகிறவர்கள். யாகங்களில் மிகக் கடுமையான முறையில் விதிக்கப்பட்ட கடினமான யாகங்களையும் அனுஷ்டித்துக் காட்டி தங்கள் ச்ரௌத வித்யையின் சாதுர்யத்தையும் நிரூபித்துக் காட்டியவர்கள். பூர்வ மீமாம்ஸா சாஸ்த்ரத்தில் வேத மந்த்ரங்களே தேவதைகள், அதைத் தவிர தனியாக உருவத்துடன் தேவதைகளை ஒப்புக் கொள்ளவில்லை. அந்த சாஸ்த்ரத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் இந்த திருவிசலூர் வித்வான்கள். புராணக் கதைகளை அர்த்தவாதமாகக் கருதி பொழுது போக்குக்காகவும் அதை விமரிசிப்பவர்கள். பல வித்வான்கள் சேர்ந்து விடவே சிவ விஷ்ணு விஷயமான சர்ச்சை ஏற்பட்டது. ஒவ்வொருவரும் தங்களது அதி மேதா விலாஸத்துடன் ஸகல புராணங்களிலிருந்தும் மேற்கோள் காட்டி சிவ நிந்தை விஷ்ணு நிந்தையை கூசாமல் பேசினார்கள். எல்லை மீறி இவர்கள் உத்ஸாஹத்தில் தேவதா நிந்தனம் செய்கையில் அங்கிருந்த ஸ்ரீ ஸ்ரீதரர் தன்னையுமறியாமல் தாபத்துடன் ''சிவ சிவ ராம ராம'' என்றார். சபையின் நியமத்திற்கு கட்டுப்பட்டவ ராதலால் எழுந்திருக்கவும் முடியவில்லை.

ஸ்ரீ ஸ்ரீதரரின் நாமோச்சாரணத்தைக் கேட்டதும் ஸபை ஸ்தம்பித்துவிட்டது. அவர் கண்களில் பெருகியிருந்த நீர் அனைவரையும் தலை கவிழச் செய்தது.

அரசனும், ''வித்வான்களுக்கு வந்தனம். உங்கள் சொல் ஒவ்வொன்றுக்கும் மிகவும் கவுரவம் உண்டு. பொறுப்புடன் பேசுபவர்கள் நீங்கள். தற்போது நடக்கும் விவாதம் இன்னும் முற்றுப்பெறவில்லை. இந்த விவாதத்தில் ஸம்பந்தப்படாமல் தனித்தமர்ந்திருக்கும் 'ஸ்ரீ ஸ்ரீதர ஐயாவாள்' அவர்களை இதற்கு தகுந்த ஓர் முடிவைச் சொல்லி சபையைப் பூர்த்தி செய்து வைக்க வேண்டுகிறேன்'' என்றார்.

அரசர் வினயத்துடனும், பக்தியுடனும் ஸ்ரீ ஸ்ரீதர ஐயாவாள் என்று மிக மரியாதையுடன் அவரைக் குறிப்பிட்டதும் வித்வான்கள். அரசருக்கு அவரிடமிருந்த மரியாதையை நன்கு உணர்ந்தனர். பிற்காலத்திலும் இந்த பெயரிலேயே பிரசித்தி பெற்றார். அனைவரது முகமும் ஸ்ரீ ஐயாவாளின் முகத்தையே நோக்கிய வண்ணம் இருந்தது.

ஸ்ரீ ஐயாவாள், ''மஹான்களுக்கு நமஸ்காரங்கள். நமக்கு பரம ப்ரமாணம் வேதம். வேதத்தில் சிவ விஷ்ணு ஸுக்தங்கள் உள்ளன. அவற்றில் சிவ நிந்தனையோ, விஷ்ணு நிந்தனையோ இல்லை. இதனால் நாம் அறிவது சிவன், விஷ்ணு யாவும் ஒரே ப்ரும்மத்தின் வெவ்வேறு நாமங்கள். வேதத்திலும் தேவதைகளின் நாமத்திற்கே முக்கியத்வம். ரூபம் இரண்டாம் பக்ஷம் என்று தெரிகிறது. நமக்கு நாமமே சுலபமாக உள்ளது. எனவே ஸகல புராணங்களும் வேதத்தின் உப ப்ரமாணமாக இருப்பதால் ***சிவ விஷ்ணு அபேதமே அவற்றின் தாத்பர்யம்.*** இதைக் கேட்டு என்னை அனுக்ரஹித்த அனைவருக்கும் நமஸ்காரம்'' என்றார்.

அரசனும் வித்வான்களும் யாரையும் புண்படுத்தாத இவரது ஸத்ய வசனத்தைக் கேட்டு பிரமித்தனர். எல்லா வித்வான்களும் ஒரே குரலுடன் அரசரிடம் இவரை எங்கள் கிராமத்தில் தங்கியிருக்க ஏற்பாடு செய்யணும் என்றார்கள். அரசர் மிகுந்த சந்தோஷத்துடன் அங்கீகரித்தார்.

(தொடரும்)

# ஸ்ரீ குருஜியுடன் பண்டரீபுர யாத்திரை

*1994*-ம் வருஷம் ஜனவரி மாதம் பொங்கலையொட்டி வந்த விடுமுறை நாட்களை நாங்கள் அனைவரும் பண்டரீபுரம் சென்று பாண்டுரங்கனுடன் கழிக்க விரும்பினோம்.

யாத்திரைக்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வந்தது. நாங்கள் இதற்கு முன்பாக பிருந்தாவனம், பத்ரிகாச்ரமம் எல்லாம் சென்ற பொழுது செதலபதி சௌந்தரராஜ பாகவதர் உடன் வந்தார். ஸ்ரீ குருஜி ஏதாவது யாத்திரை கிளம்பினால் உடன் ஒரு பாகவதரையும், வைதீகரையும் அழைத்துச் செல்வது வழக்கம். அது போல் இந்த முறை திருவல்லிக்கேணி மீனாட்சி மஹாதேவன் என்ற மாமியை ஸ்ரீ குருஜி யாத்திரைக்கு அழைத்துச் செல்ல ஆசைப்பட்டார். அவர் மிக நன்றாக அபங்கங்கள் பாடுவார். மாமியும் ஸ்ரீ குருஜியுடன் வருவதை பெரிய பாக்கியமாகவே கருதி யாத்திரையில் கலந்து கொண்டார்.

நாங்கள் சுமார் 60 பக்தர்கள் 14-1-94 அன்று இரவு பாம்பே மெயிலில் கிளம்பி சென்றோம். ரயிலில் போகும் பொழுது எல்லாம் ஓயாமல் நாம ஸங்கீர்த்தனம் தான். இரவு வெகு நேரம் சென்ற பிறகுதான் படுக்கச் செல்வோம். பகலில் அவரவர் ஆகாரத்தை அவரவர்களே எடுத்து வந்துவிட்டதால் அவ்வப்பொழுது ஆகாரம் சாப்பிட்டுவிட்டு மீதி நேரம் முழுவதும் நாம ஸங்கீர்த்தனம் ஆனந்தமாக செய்து கொண்டு வந்தோம். ஆகவே அனைவருக்கும் ரயிலில் பயணம் செய்த களைப்போ நேரம் போனதோ தெரியவில்லை. மறு நாள் மாலை சுமார் 6.30 மணியளவில் ஷோலாப்பூர் ஸ்டேஷன் வந்தடைந்தோம். அங்கிருந்து பஸ்ஸில் புறப்பட்டோம்.

ஷோலாப்பூர் ஊரே மிகவும் ரம்மியமாக இருக்கும். ரயில்வே ஸ்டேஷனை ஒட்டி கொஞ்ச தூரம் தான் நகர்புற களை இருக்கும். அது தாண்டியவுடன் கிராமக் களையாகத்தான் இருக்கும். வழி நெடுக பஞ்சாலைகள். அனைவரும் வரிசை வரிசையாக பஞ்சாலையிலிருந்து வீடு திரும்புவதை பார்த்துக் கொண்டே சென்றோம். எல்லா ஆண்களும் ஒரு வெள்ளைக் கலரில் பைஜாமா தொப்பி சஹிதமாக இருப்பார்கள். நாங்கள் அனைவரும் நிறைய நாமாக்கள் சொல்லியவாறே பண்டரீ எப்பொழுது வரப்போகிறது என்று தவித்தபடி இருந்தோம். இதில் அனைவருமே ஸ்ரீ குருஜியிடம் பாண்டுரங்க லீலை பிரவசனம் கேட்டு மானஸீகமாகவே பண்டரீபுரத்தில் உலாவியவர்கள்தாம். அதனால் நாம் கற்பனை செய்தது மாதிரி இருக்குமா பண்டரீபுரம், எப்படி இருக்கும்? என்று ஒரே ஆவல். சந்திரபாகையை தாண்டியவுடனே எல்லோருக்கும் ஆனந்தம் தாங்கவில்லை. இரவு 9 மணி அளவில் பண்டரீயை அடைந்துவிட்டோம். கர்னாடக பிரதேசத்தைச் சார்ந்தவர்கள் வைத்திருக்கும் ஒரு சத்திரத்தில் எங்கள் அனைவருக்கும் தங்குவதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். சத்திரம் மிகவும் பெரிதாகவும், வசதியாகவும், சுத்தமாகவும் இருந்தது. அனைவரையும் ஸ்ரீ குருஜி ஏதாவது காப்பியோ டீயோ சாப்பிட்டு விட்டு அரை மணியில் தயாராகச் சொன்னார்கள்.

ஸ்ரீ குருஜியும் 9.30 மணி அளவில் ஸ்நானம் செய்துவிட்டு பாண்டுரங்கனை தரிசனம் செய்ய தயாராகிவிட்டார். அனைவரும் அவர் பின்னாடியே ஓடினோம். வெகு அருகாமையிலேயே பாண்டுரங்கன் கோயில். நேரே சன்னதிக்கு ஓடிச் சென்றோம். பாண்டுரங்கன் இடுப்பில் கையை வைத்துக் கொண்டு சின்மயமான மூர்த்தியாகவே இருந்தான். எங்களையெல்லாம் பார்த்ததில் அவனுக்கு மிகவும் சந்தோஷம் என்பது போல் தோன்றியது. நாமதேவர் குழந்தையாக அழுத பொழுது அவருக்காக வாயை திறந்து சாப்பிட்ட அதே பாண்டுரங்கன், கோராகும்பரின் பத்தினி இந்த யோக பீடத்தில்

பாண்டுரங்கனை கட்டிக்கொண்டு குழந்தைக்காக அழுத அதே பாண்டுரங்கன், ஸேநாயீக்காக க்ஷவரம் செய்த அதே பாண்டுரங்கன், ரயிதாஸுக்காக செருப்பு தைத்த அதே பாண்டுரங்கன், நரஹரி கோனாருடன் விளையாடிய அதே பாண்டுரங்கன், ஸமர்த்த ராமதாஸுக்காக ராமனாக மாறிய அதே பாண்டுரங்கன், சக்கு பாய்க்காக எவ்வளவோ வீட்டு வேலைகளை செய்த அதே பாண்டுரங்கன், நாம ஸங்கீர்த்தனம் நடந்தால் வெட்கம் இல்லாமல் ஓடி வரும் அதே பாண்டுரங்கன், இங்கு பேசாமல் நின்று கொண்டே உலகத்தில் எவ்வளவோ பேரை பைத்தியமாக செய்துள்ளான். ஒவ்வொருவரும் கிட்டே சென்று தரிசனம் செய்தோம். அனைவரும் தொடலாம். ஸ்ரீ குருஜிக்கு அந்த பண்டா மாலைகள் எல்லாம் பாண்டுரங்கனின் கழுத்தில் இருந்து பிரசாதமாக எடுத்துப் போட்டார். சன்னதி முன்பாக உட்கார்ந்து ***'விட்டலாரே'*** என்ற அபங்கமும் நாமாவளியும் பாடினோம். பின்பு ருக்மணியின் சன்னதியில் போய் தரிசனம் செய்தோம். ருக்மணியின் சன்னதி முன்பாக மிகப் பெரிய இடம் உள்ளது. ஸ்ரீ குருஜி அங்கு ***'ஏஹி கோபாலா'*** பாட ஆரம்பித்தார். ***பா***வம் மேலிட்டு ஆனந்தமாக நர்த்தனமாடினார். பார்ப்பதற்கு மிகவும் ஆனந்தமாகவே இருந்தது. இன்னும் சில பஜனை பாடல்களையும் பாடினோம். மிகவும் குதூஹலம்தான். பிறகு வெகு நேரமாகிவிட்டதால் நேராக சத்திரத்திற்கு வந்து விட்டோம். இரவு ஆகாரம் எடுத்துக் கொண்டு அனைவரும் படுத்துக் கொண்டோம்.

மறு நாள் காலையில் அனைவரும் 3 மணி அளவில் எழுந்து விட்டோம். கால்களைக் கூட கீழே வைக்க முடியவில்லை. நல்ல குளிர். பரம பவித்ரமான பகவானைத் தியானம் செய்வதுதான் பவித்ரமான விஷயம். ஹரி நாமத்தை உச்சரித்துக் கொண்டே வீதி பஜனைக்கு தயாரானோம். பண்டரீபுரம் நான்கு வீதிகளிலும் நாம கோஷம் விண்ணைப் பிளந்தது. அனைவருமே நாமாவளியை வாங்கிப் பாடினார்கள். நான்கு வீதிகளிலும் அனைவரும் கூடி நின்று ஆனந்தித்தார்கள்.



பிறகு நேராக கோயிலுக்கு சென்று பாண்டுரங்கனைக் கண்ணாரக் கண்டு ஆனந்தித்தோம். திரும்ப ஜாகைக்கு வந்து சேரும்பொழுது 6 மணியாகி விட்டது. மீண்டும் காபியோ டீயோ சாப்பிட்டுவிட்டு ஸ்நானத்திற்குத் தயாரானோம். நல்ல குளிர்,. ஆகவே ஜாகையிலே மீண்டும் சிறிது நேரம் பஜனை செய்தோம். சுமார் 8 மணி அளவில் ஓரளவு குளிர் குறைந்துவிட்டது. அனைவரும் சந்திரபாகையில் ஸ்நானம் செய்ய புறப்பட்டோம். இப்பொழுதுதான் ஊர் கொஞ்சம் கொஞ்சமாக சுறு சுறுப்படைகின்றது. எங்களுடைய ஜாகைக்கு பின்புறம்தான் சந்திரபாகை ஓடுகின்றது. பீமா நதி என்ற பெயரும் அதற்கு உண்டு. போகும் வழியில் எல்லாம் துளஸி மாலை, கோபீ சந்தனம், ஜால்ராக்கள் விற்கும் கடைகளே அதிகம். சந்திரபாகை நதியில் ஜலம் அவ்வளவாக இல்லை. ஜலம் இருக்கும் (சற்று ஆழமான) இடத்தை தேடிக் கொண்டு ஸ்ரீ குருஜி சென்றார். அவர் நித்யம் பூஜை செய்து வரும் சிறிய பாண்டுரங்கனும் அவருடன் வந்திருந்தான். முதல் முறையாக ஸ்ரீ குருஜி பாண்டுரங்கனைத் தலையில் வைத்துக் கொண்டு ஆனந்தமாக நாம ஸங்கீர்த்தனம் செய்தார்கள். எல்லோரும் உடன் வாங்கிப் பாடி ஆனந்தப்பட்டோம். உடம்பெல்லாம் மின்சாரம் பாய்ந்தது போன்ற உணர்வு அநேகருக்கு ஏற்பட்டது. பிறகு எல்லோரும் ஸ்ரீ பாண்டுரங்கனுடனும், ஸ்ரீ குருஜியுடனும் சந்திரபாகையில் தீர்த்தமாடினோம்.

எங்களுடைய பாக்கியத்தை நினைத்து எங்களுக் கெல்லாம் அழுகையே வந்து விட்டது. எவ்வளவோ வசதி இருப்பவர்களும், பணம் இருப்பவர்களும் வெளி நாடு என்றும் சுற்றுலா என்றும் எங்கெங்கோ செல்கின்றார்களே ஒழிய ஒருவருக்கும் பண்டரீ வரத் தோன்றவில்லையே. காரணம் என்ன? பாண்டுரங்கன் கிருபையில்லை என்பதுதான். எங்கள் மேல் தான் பாண்டுரங்கனுக்கு எத்தனை கருணை! இந்த க்ருபை என்றும் மாறாமல் இருக்கவேண்டும் என்று பிரார்த்தித்தோம். எங்கும் நிறைய பிச்சைக்காரர்கள். அவர்கள் அனைவரும்

பாக்கியவான்கள். ஏதோ ஊட்டியிலோ, கொடைக்கானலிலோ பிச்சை எடுக்காமல் பண்டரீயில் அல்லவா வாஸம்! சந்திரபாகையில் அல்லவா ஸ்நானம்! பிச்சை கிடைப்பதோ ஸாதுக்களின் உச்சிஷ்டம். அநேக ஸாதுக்களின் கடாக்ஷமும் அவர்கள் மேல் தான். இவர்களே ஸாதுக்கள் ஆகிவிட்டார்கள். எல்லோரையும் தரிசித்துக் கொண்டே ஜாகை வந்தோம்.

காலை ஆகாரம் எடுத்துக் கொண்டு சிறிது நேர ஓய்வுக்குபின் மீண்டும் அனைவரும் கோவிலுக்குச் சென்றோம். அங்கு கோவில் அதிகாரிகள் ஒரு இடத்தைக் காண்பித்து அங்கு அமர்ந்து நாம ஸங்கீர்த்தனம் செய்யலாம் என்று கூறினார்கள். நாங்களும் அங்கு அமர்ந்து சுமார் 2½ மணிநேரம் பஜனை செய்தோம். பஜனையில் அஷ்டபதி எல்லாம் பாடினோம். அப்பொழுது கோவிலில் நல்ல கூட்டம். ஸ்ரீ குருஜி பாடிய ***'விட்டலா நீ என்னை கை விடலாகுமோ?'*** என்ற பாடலை பாடிய பொழுது கோவிலில் உச்சிக்கால பூஜை நேரம் போலும், டம டம என்று வாத்தியங்கள் முழங்கியது பரவசமூட்டுவதாக இருந்தது. பாண்டுரங்கன் ஸ்ரீ குருஜியின் பாட்டை ஏற்றுக் கொண்டுவிட்டான். அதை ஏற்றுக் கொண்டதன் மூலம் எங்கள் அனைவரையும், கைவிடமாட்டேன் என்று தண்டோரா போட்டு கூறிவிட்டான். பிறகு அனைவரும் மதிய ஆகாரம் எடுத்துக்கொண்டு ஓய்வு எடுத்துக் கொள்ளலாம் என்று ஸ்ரீ குருஜி சொன்னார்கள். ஆங்காங்கே அவரவர்கள் தனியாக பஜனையோ ஜபமோ செய்து கொண்டிருந்தார்கள்.

மாலை 4 மணிக்கு அனைவரும் சக்குபாய் வாழ்ந்த கிராமமான ***கோபால்புரி*** சென்றோம். ஸ்ரீ குருஜி நடந்துதான் வந்தார். முடியாதவர்கள் சிலர் வண்டிகளில் வந்தார்கள். ஸ்ரீ குருஜி வேகமாக சென்று விட்டார். பிறகு அனைவரும் வருவதற்காக அங்கிருந்த கோவிலின் வாசலில் அமர்ந்திருந்தார். அனைவரும் வந்த பிறகு உள்ளே சென்று அங்கு இருக்கும் எல்லா இடங்களையும் பார்த்தோம். அந்த பண்டா சக்குபாய் உபயோகித்த பாத்திரங்கள், இயந்திரம் (மாவு அரைக்கும்)

எல்லாவற்றையும் காண்பித்தார். கீழே ஒரு குகை போன்ற இடத்தில் சக்கு பாய்க்கு பாண்டுரங்கன் தரிசனம் கொடுத்த இடம் உள்ளது. அங்கு ஒரு சிறிய பாண்டுரங்கன்-ருக்மணி இருக்கின்றார்கள். இவர்கள் மிகவும் அழகாகவும் தீர்க்கமாகவும் உள்ளனர். எங்கள் யாவருக்கும் இவர்களை விட்டுப்பிரியவே மனம் இல்லை. அவ்வளவு அழகு. பிறகு அங்கிருந்து புறப்பட்டு, சந்திரபாகைக் கரையில் ஒரு மரத்தடியைக் காண்பித்து ஸ்ரீ குருஜி இந்த இடத்தில்தான் ஜனாபாய்க்கு பாண்டுரங்கன் தரிசனம் கொடுத்தான் என்று கூறினார். நாமதேவர் கீர்த்தனம் செய்யும் பொழுது அதைக் கேட்க ஆசையுடன் ஓடி வந்த பாண்டுரங்கன் தன்னை மறந்து ஆட, பீதாம்பரம் அவிழ்ந்து விழ, அதைக் கண்ட ஜனாபாய்க்கு ஆனந்தத்தால் பரவசம் மேலிட, எல்லாம் நிகழ்ந்தது இந்த இடம் தான் என்று ஸ்ரீ குருஜி விவரமாகவும் உருக்கமாகவும் பிரவசனம் செய்தார்.

பிறகு அனைவரும் அங்கிருந்து வண்டியிலும், போட்டிலும், நடையுமாக ஜாகை திரும்பினோம். மாலை நன்றாக இருட்ட ஆரம்பித்து விட்டது. நடந்து வரும் பாதை முழுவதும் கருப்பஞ்சோலை. பட்சிகள் சப்தம் மிகவும் ரம்மியமாக இருந்தது. வந்த உடனே ஸ்ரீ குருஜி சந்திரபாகையில் மாலை ஸ்நானத்திற்கு சென்று அனுஷ்டானம் முடித்து திரும்பினார். பிறகு ஜாகை வந்து சிறிது நேரம் நாம ஸங்கீர்த்தனம் செய்து 8 மணி அளவில் கோவிலுக்கு சென்றோம். கோவில் அதிகாரிகள் எங்களுக்கு என்று ஒரு தனி இடத்தை ஒதுக்கிக் கொடுத்தார்கள். அங்கு அனைவரும் அமர்ந்தோம். உருக்கமாக ஸ்ரீ குருஜி பாண்டுரங்க லீலை பிரவசனம் செய்தார். பாஷை தெரியாதவர்கள்கூட அநேகம் பேர் நின்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். ***ப்ரேமைக்கு பாஷை எதற்கு?*** பிரவசனம் முடிந்து அனைவரும் ஜாகை திரும்பி ஓய்வு எடுத்துக்கொண்டோம்.

மறு நாள் காலை 5 மணிக்கு எழுந்து ஸ்நானம் செய்து ப்ரபோதனம் செய்து ஜாகையில் அமர்ந்தபடியே வெகு நேரம்

நாம ஸங்கீர்த்தனம் செய்ததில் அனைவருக்குமே ஆனந்தம். பிறகு நிறைய ஜீப்புகளை அமர்த்திக் கொண்டு ***ஆலந்தி***யும், ***தேஹ்*** (துக்காராம் சரீரத்துடன் வைகுண்டம் சென்ற இடம்) போக கிளம்பினோம். ஆனால் நேரம் அதிகம் இன்மையால் ஆலந்தியுடன் திரும்பும்படி ஆகி விட்டது. அவரவர்கள் பத்து, பத்து பேராக பிரிந்து சென்றதால் தனித்தனியாக ஓடிக்கொண்டும் பேசிக்கொண்டும் சென்றோம். மாலை 6 மணிக்கு ஆலந்தி சென்றோம். ***ஞானதேவருடைய*** சமாதி மிகவும் பெரியதாக உள்ளது. உள்ளுக்குள் நுழைந்தவுடனே சாந்நித்யம் நன்றாக புரிகின்றது.

ஆங்காங்கே அநேகம் நபர்கள் அமர்ந்து ஜபம், பாராயணம் எல்லாம் செய்து கொண்டிருந்தார்கள். நாங்கள் அனைவரும் கை கால் அலம்பி விஷ்ணு ஸஹஸ்ரநாமம் பாராயணம் செய்தோம். பிறகு உள்ளே ஒவ்வொருவராகச் சென்று தரிசனம் செய்து கொண்டு எதிரில் உள்ள பெரிய ஹாலில் அமர்ந்து அனைவரும் நாம ஸங்கீர்த்தனம் செய்தோம். உலகத்தில் சிறு வயதிலேயே ஞானதேவர் மராட்டிய பாஷையில் எழுதிய ***ஞானேஸ்வரி*** என்ற கீதா பாஷ்யம் அதி பிரசித்தியானது. ஆகவே ஸ்ரீ குருஜி அங்கு எங்களுடன் வந்த மதுரத்தை கீதை பாராயணம் செய்யச் சொன்னார். பிறகு அனைவரும் கிளம்பி மீண்டும் பண்டரீ வர, மறு நாள் விடியற்காலை 3 மணி ஆகி விட்டது. பிறகு சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டு ஷோலாப்பூரை சுமார் 6.30 மணி அளவில் வந்து அடைந்தோம். ரயில் வண்டி 11.30 மணிக்குதான் வரும் என்று கூறி விட்டதால் பிளாட்பாரத்திலேயே அமர்ந்து அனைவரும் நாம ஸங்கீர்த்தனம் செய்ய ஆரம்பித்துவிட்டோம். பிறகு வண்டியில் ஏறி நாம ஸங்கீர்த்தனத்துடனே மறு நாள் காலை சென்ட்ரல் வந்து சேர்ந்தோம். இப்படியாக எங்களுடைய பண்டரீபுர யாத்திரை இனிது முடிந்தது.

***-காஞ்சனா சங்கரன்***

# ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து - 10

(பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் அருணாசல அக்ஷர மண மாலை - ஸ்ரீ குருஜியின் உபன்யாஸத்திலிருந்து சில பகுதிகள் - தொடர்ச்சி)

சகல சாஸ்த்ரங்களின் ஸாரம் ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை அடைவதுதான். ஜீவன் முக்தி அடைந்த ஒருவரையே குருவாய் அடைய வேண்டும். மஹாத்மாக்களால்தான் மஹாத்மாக்களை புரிந்து கொள்ள முடியும். சாதாரண மனிதர்களால் ஒருகாலும் புரிந்து கொள்ள முடியாது. சாதாரண மனிதர்களின் புத்தியின் சக்தி ஒரு எல்லைக்குக் கட்டுப்பட்டதாக இருப்பதால், புத்தியை வைத்து கொண்டு எதையும் தீர்மானம் செய்ய இயலாது.

பகவான் இருக்கிறார். ஜீவன் முக்தியைத்தான் அடைய வேண்டும் என்று எல்லாம் சொல்வது சாஸ்திரம். அந்த சாஸ்திரங்கள் விஷயத்திலும், இன்று அபிப்ராய பேதம் வந்து விட்டது. காரணம்? சாஸ்திரங்களும், வேதமும் சுத்தமாகத்தான் இருந்தன. வானத்திலிருந்து விழும் மழை நீரை நேராக எடுத்துப் பார்த்தால் சுத்தமாகத்தான் இருக்கும். அதுவே ஒரு ஓட்டில் விழுந்து கீழே விழுந்தால் தூசி படிந்து அழுக்காகி விடுகிறது. அது போல், காலப்போக்கில், வேதங்களும் சாஸ்திரங்களும் பக்ஷ பாதம் உடைய சித்தாந்திகளின் கையில் சிக்கியதால், அவர்கள் சாஸ்திரங்களை தங்கள் சித்தாந்தத்திற்கு ஏற்ற மாதிரி அணுகியதால், அபிப்ராய பேதம் வந்து விட்டது. சகல சாஸ்திரங்களின் சாரமே இப்படி ஜீவன் முக்திதான் என்பதற்கு ப்ரமாணமே மஹாத்மாக்களின் வாக்குதான்.

அப்படி என்றால், இந்த ஸ்வரூபத்தை ஸாட்க்ஷாத் கரிப்பதற்கு வழி என்ன? பல வழிகள் உள்ளன. ஆனால்,

அவ்வழிகளே ஆத்ம சாட்சாத்காரத்தில் கொண்டு சேர்க்காது. அந்த வழிகள் போக வேண்டிய பாதையைக் காண்பிப்பதாய் இருந்தாலும் கூட, நாம் தான் அந்த வழியில் பிரவேசித்து பிரயத்தனப்பட வேண்டும். இங்கிருந்து நடந்து போகும் வழியில் திருவண்ணாமலைக்கு இத்தனை கி.மீ. என்று போர்டு இருந்தால், அந்த போர்டு நம்மைக் கொண்டு போய் திருவண்ணாமலைக்கு சேர்க்காது. அதை திருப்பித் திருப்பிப் படிப்பதனாலும் போய் சேர மாட்டோம். அந்த போர்டு காட்டும் வழியில் சென்றால் எப்படி திருவண்ணாமலையை அடைய முடியுமோ, அதே போல், வெறும் சாஸ்திர அறிவு மட்டுமே அநுபூதியைக் கொண்டு வந்து சேர்க்காது. சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட விஷயத்தை அப்யாஸத்தில் கொண்டு வந்து நிறுத்தினால்தான், அநுபூதி பெற இயலும்.

உலகில் உள்ள வித்தைகள் அனைத்தும் தெரிந்தாலும், இந்த ஆத்ம வித்தை தெரியாது என்றால் ஒரு உபயோகமும் இல்லை. இந்த ஆத்ம வித்தையை தெரிந்துகொண்டு ஜீவன் முக்தன் ஆனால், வேறு எந்த வித்தையையும் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. எந்த ஒரு இனமும் அதன் சமூகத்தில் உயர்ந்ததாக இருந்தால், அதை ராஜா என்பது வழக்கம். பக்ஷி ராஜா, மிருக ராஜா என்பது போல். அது போல் வித்தைகளிலேயே ***இந்த ஆத்ம வித்தை உயர்ந்ததாக இருப்பதால், இதை க்ருஷ்ணர் கீதையில் ராஜ வித்தை என்கிறார்.***

ஒரு பெரிய நதி ஓடுகிறது. அதில் நிறைய படித்துறைகள் இருக்கின்றன. படித்துறை வழியாக இறங்கிப் போனால் ஆனந்தமாகக் குளிக்கலாம். அது மாதிரி ஒரு தடாகமிருக்கிறது. அதைச் சுற்றி நாற்புறமும் படிக்கட்டுகள் இருக்கின்றன. எந்தப் படிக்கட்டு வழியாகப் போனாலும், நீரைப் போய் சேர்வது போல், இதில் பக்தி, கர்மம், ஞானம், தியானம் என்று எந்த வழியில் போனாலும், ஒருவன் அடையவேண்டியது ஸ்வரூபத்தைத்தானே தவிர, வேறு எதுவும் இல்லை.

இந்த ஸ்வரூபத்தைத் தெரிந்து கொண்டால்தான் நிம்மதி. ஆகையால் எப்பாடுபட்டாவது இதைத் தெரிந்து கொள்ள வேண்டும். மீதி எல்லா வழிகளைக் காட்டிலும் ஞான மார்க்கத்திற்கு என்ன உயர்வு என்றால், மீதி எல்லா மார்க்கங்களும் சாதனையாக உள்ளன. *ஞான யோகமோ சாதனையாக இல்லாமல் சாத்யமாக இருக்கிறது.*

எப்படி என்றால், கர்ம மார்க்கத்திலுள்ளவர்கள், சிகை, கச்சத்துடன் அக்னி ஹோத்ரம் யாக, யக்ஞங்கள் செய்து வரும் பொழுது, ஏதோ நமக்கு ஞானம் வந்தது போல் முமுக்ஷுக்கள் மாதிரி நாம் அவர்களைப் பார்த்து வெறும் வறட்டு கர்மாக்களை பண்ணுகிறார்கள் என்று நினைக்கிறோம். இது மிகவும் தவறு. கர்ம மார்க்கமும் மோக்ஷ சாதனம் தான். இதற்கு ச்ருதி தான் ப்ரமாணம். ***'ஆத்மா யக்ஞேன கல்பதாம்'*** என்று சொல்கிறது அல்லவா? யக்ஞத்தினால் ஆத்மா அடையப்பெறும் என்றால், செய்யும் கர்ம அனுஷ்டானங்களை சித்த சுத்திக்காக செய்து வந்தால், அதனால் ஞானத்வாரகா மோக்ஷத்தை அடைய முடியும்.

பக்தி செய்பவர்கள், தாம் ஏதோ ப்ரேம பக்தி செய்வதாக நினைக்க வேண்டாம். பக்தியில் காம்ய பக்தியும் உண்டு. இன்று உலகில் அதிகம் காணப்படுவதும் காம்ய பக்திதான். இன்று க்ஷீணமடைந்து வரும் கோவில்களில், பூஜையும், கும்பாபிஷேகமும் நடைபெறுவதற்குக் காரணமே காம்ய பக்திதான். இதைவிட உயர்ந்தது சாதனா பூர்வமான பக்தி. பக்தி பண்ண ஆரம்பித்த உடன் ப்ரேம பக்தி வருவது இல்லையே. ஆக, நவ விதமான பக்தி சாதனங்களைக் கைக்கொண்டு அதன் மூலம் அடையப்பெறுவது ப்ரேம பக்தி அல்லது ராக பக்தி என்று சொல்லி விடலாம். பக்தியில் காம்ய பக்தியும் உள்ளது. மோக்ஷ சாதனமான பக்தியும் உள்ளது.

ஒருவர் பக்தி செய்து பகவானிடம் சித்த சுத்தியை பிரார்த்தனை செய்தால் அவருக்கு பலன் ஞானம். சித்த சுத்தியினால் ஞானம் அடையப்படும். அதே போல் கர்மானுஷ்டானங்களை சித்த சுத்திக்காக செய்து மோக்ஷத்திற்கு

ஆசைப்பட்டால், கிடைக்கும் பலன் மோக்ஷம். இதே கர்மாக்களை உலக காரியங்களை எண்ணி செய்தால் அதற்கு ஏற்ற பலன் கிடைக்கும்.

அது போல் யம, நியம, ஆசனம், ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம், தியானம், சமாதி என்று அஷ்டாங்க யோகம் பழகி ராஜ யோகம் வழியாக ஒருவர் ஆத்ம ஸாட்க்ஷாத்காரத்துக்காகப் பாடுபட்டால், அந்த யோகத்தின் லட்சியமும், அத்வைத ப்ரும்ஹ சாட்சாத்காரமும் ஒன்றுதான். மாறாக, ராஜ யோகம் செய்து அஷ்டமா சித்திகளில் மயங்கி, மக்களை செப்பிடு வித்தை காண்பிப்பது போல் சித்திகளைக் காட்டி ஏமாற்றி வந்தால் அவனும் காம்யமான யோகிதான். ஆக, யோகத்திலும் காம்யமான யோகமும் உண்டு, மோக்ஷ பூர்வமான யோகமும் உண்டு. பக்தியிலும் காம்ய பக்தி உண்டு, பிரேம பக்தி உண்டு. கர்மாக்களைப் பற்றிச் சொல்லும் பொழுதும் இதே போல் சொன்னேன்.

ஆனால், இப்படி ஞானத்தில் காம்யமான ஞானம், மோக்ஷ பூர்வமான ஞானம் என்று இரண்டு இல்லை. ஞான சாதனம் மோக்ஷத்துக்காகப் பண்ணக்கூடியதே தவிர, காம்யத்துக்காக பண்ண முடியாது. இவர் காம்யத்துக்காக ஞானம் பண்ணிண்டு இருக்கார், இவர் மோக்ஷத்துக்காக செய்கிறார் என்று சொல்ல முடியாது. ஆனால் இப்பொழுது உலகத்தில் காம்யமான ஞானமும் வந்துவிட்டது.

எப்படி என்றால், சிலர் ஞான வைராக்கியங்களில்லாமல், வெறும் வயிற்றுப் பிழைப்புக்காக காவி வஸ்திரம் உடுத்திக் கொண்டு இருப்பதால், காம்யமான ஞானமும் வந்துவிட்டது என்றுதான் சொல்ல வேண்டி இருக்கிறது.

'ஞானம் தவிர மீதி எல்லாம் எவ்வாறு சாதனை என்றால், மற்ற எல்லாவற்றையும் மனதை வைத்து செய்ய வேண்டி உள்ளது. மனதே ஜடம்தானே? இந்த ஜடத்தை வைத்து செய்யக்கூடிய கார்யங்களும் ஜடமே ஆகும். ஞானம் மட்டும் மனதை அழிப்பதற்காக பண்ணக்கூடிய நேரடியான ஒரு சாதனம். இது ஜடமில்லை, சாதனமாகாது, சாத்யமாகும்.

ஆனால் இப்படி ஞான யோகம் பழகும் பொழுது ஒருவன் ப்ரணவ மந்த்ரம் ஜபம் செய்வதோ அல்லது 'தத்வமஸி', 'அஹம் ப்ரம்ஹாஸ்மி', 'சிவோஹம்' போன்ற மஹா வாக்யங்களை ஜபம் செய்து வந்தாலும் கூட, அவனை பூரண ஞான சாதகன் என்று கூற முடியாது. அவன் தியான யோகி மாதிரிதான். தியானத்தில் பகவன் நாமாக்களை மனதை வைத்துக் கொண்டு ஜபம் செய்வது போல், இவனும் தத்வபூர்வமான மந்த்ரங்களை அனு சந்தானம் பண்ணுகிறான். ஆனால் ***'வேதாந்த வாக்யந்தே ரமந்தஹா'ன்னு*** சொல்லிவிட்டால், அதன் தாத்பர்யத்தைத்தான் நினைக்க வேண்டுமே தவிர, வாக்கியத்தைத் திருப்பித் திருப்பி சொல்வதில் ஒரு பிரயோஜனமும் இல்லை.

பகவானே கூட 'நான் யார்' என்று பார் என்று சொல்லிவிட்டால், வெறும் கண்ணை மூடி 'நான் யார்' என்று திருப்பி திருப்பி சொல்லுவது பகவானின் அபிப்ராயமாகாது. தமிழ் தெரிந்த நாம் அனைவரும் 'நான் யார்' என்று ஜபம் செய்தால், ஒரு ஆந்திர தேசத்துக்காரரோ, ஒரு கேரள தேசத்துக்காரரோ என்ன என்று ஜபம் செய்வார்? 'நான் யார்' என்று பார்க்கச் சொல்கிறாரே தவிர – 'அஹம்' என்று எங்கு ஸ்புரிக்கிறதோ அந்த இடத்தைப் பார்க்க சொல்கிறாரே தவிர – வெறும் 'நான் யார்' என்று ஜபம் செய்வது அபிப்ராயமில்லை.

இந்த வேதாந்த வாக்கியங்களை நாம் அப்யாஸம் செய்யும் பொழுது, அதன் தத்வார்த்தங்களைத் தெரிந்து செய்தால், ஞானம் சாத்யமாகிறது. ஆகையால், ஞானம் ஒரு சாதனமில்லை, அது ஒரு சாத்யமான வஸ்துவாகவே இருக்கிறது.

இந்த ஞானத்தை ஏன் அடையவேண்டும்? உலகில் சாதாரண மனிதர்கள் எத்தனையோ பேர் எப்படியோ வாழ்கிறார்களே, நாமும் அதே மாதிரியே வாழ்ந்துவிட்டு போனால் என்ன?

(தொடரும்)

தொகுப்பு: ***ஸ்ரீ முரளீதர தாஸன்***

# செய்திகள்

## *ஏப்ரல் 20ந் தேதி முதல் 23ந் தேதி வரை*

சென்னை ***ஸ்ரீ ராம் ஸமாஜ்*** சார்பில் அயோத்யா அஸ்வமேத மஹா மண்டபத்தில், ***'பகவன் நாம மஹிமை', 'ஸ்ரீ துளஸிதாஸர்', 'ஸ்ரீ பாண்டுரங்க லீலை',*** மற்றும் ***'ஸ்ரீ துக்காராம்'*** ஆகிய தலைப்புகளில் ஸ்ரீ குருஜி ப்ரவசனம் செய்தார். நான்கு நாட்களும் ஆஸ்தீகர்கள் அதிக அளவில் ச்ரவணம் செய்து ஆனந்தித்தனர்.

✡ ✡ ✡

## *ஏப்ரல் 22ந் தேதி*

விழுப்புரத்துக்கு சமீபமான ***திருப்பாச்சினூர்*** க்ஷேத்திரத்தில் ஸ்ரீ தர்ம ஸம்வர்த்தினி ஸமேத அகஸ்தீஸ்வர ஸ்வாமி கோயில் ***கும்பாபிஷேகத்தில்*** ஸ்ரீ குருஜி கலந்து கொண்டார்கள்.

✡ ✡ ✡

## *ஏப்ரல் 24ந்தேதி*

கரூர் அருகிலுள்ள ***நெரூரில்*** ஸதாஸிவ ப்ரமமேந்திராள் ஆராதனை உத்ஸவத்தில் ஸ்ரீ குருஜி கலந்து கொண்டு ***'ஸ்ரீ ப்ரம்மேந்திராள் சரித்திரம்'*** பற்றி உபன்யாஸம் நிகழ்த்தினார்கள். முன்னதாக ஸ்ரீ ப்ரம்மேந்திராள் அதிஷ்டானத்திற்குச் சென்று தரிசித்துக் கொண்டார்கள்.

✡ ✡ ✡

## மே 1ந் தேதி முதல் 7ந் தேதி வரை

***ஆதம்பாக்கத்தில்*** உள்ள ஸ்ரீ சங்கர கேந்திரம் கைங்கர்ய சபையில் ***"பக்த விஜயம்"*** ஸ்ரீ குருஜியின் உபன்யாஸம் நடைபெற்றது. திரளான ஆஸ்தீக ஜனங்கள் கலந்து கொண்டு ஸ்ரீ குருஜியின் ப்ரவசனத்தை ச்ரவணம் செய்து ஆனந்தம் அடைந்தார்கள். ஸ்ரீ குருஜியின் ***"நாம மஹிமை"*** உபன்யாஸத்தைக் கேட்ட பிறகு, ஆஸ்தீகர்கள் ஸ்ரீ குருஜியினிடத்தில் ***"ராம நாம"*** ஜபம் எடுத்துக் கொண்டனர்.

✡ ✡ ✡

## மே 5ம் தேதி

மாலை 5.30 முதல் 6-30 வரை ***"அத்வைத ஸித்தி வாக்யார்த்த சதஸ்"***, வளசரவாக்கத்தில் உள்ள ***"சாந்தீபனி குரு குலத்தில்"*** (பாடசாலை) நடைபெற்றது. ஸ்ரீமான்கள் முல்லைவாசல் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், கோடா வேங்கடேச சாஸ்திரிகள், விஜயராகவ சாஸ்திரிகள், மல்லிகார்ஜூன சோமயாஜி ஆகியோர் கலந்து கொண்டு வாக்யார்த்தம் சொன்னார்கள்.

✡✡✡

## மே 8ந் தேதி முதல் 14ந் தேதி வரை

K.K. நகர் ***ஆஸ்திக சமாஜத்தின்*** 16ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, ஸ்ரீ முத்து மாரியம்மன் கோவிலில் ஸ்ரீ குருஜியின் உபன்யாஸம் நடைபெற்றது. ஸ்ரீ குருஜி ***"பாண்டுரங்க பக்தர்களை"ப்*** பற்றி உபன்யாஸம் செய்தார். முடிவில் சிரத்தையுடன் ச்ரவணம் செய்தவர்களுக்கு பாண்டுரங்கனிடம் பக்தி ஏற்படும் என்று ஆசி வழங்கினார்.

✡✡✡

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

## *ஜூன் 1ந் தேதி*

சென்னை ஜாபர்கான் பேட்டை ***ப்ரேமிக பவனில் சம்ப்ரோக்ஷணமும், ஸ்ரீ மஹா பெரியவாள்*** 103-வது ***ஜயந்தி வைபவமும்*** நடைபெறும்.

✡ ✡ ✡

## *ஜூன் 3ந் தேதி முதல் 9ந் தேதி வரை*

சென்னை அசோக் பில்லர் அருகிலுள்ள ***இந்திரா காலனியில்*** ஸ்ரீ குருஜியின் ***"பக்த விஜயம்"*** உபன்யாஸம் நடைபெறும்.

✡ ✡ ✡

## *ஜூன் 12ந் தேதி முதல் 17ந் தேதி வரை*

***பெரம்பூரில்*** உள்ள ஸ்ரீ சங்கர மடத்தில் – ***"பக்த விஜயம்"*** – ஸ்ரீ குருஜியின் ப்ரவசனம் நடைபெறும்.

✡ ✡ ✡

## *ஜூன் 18ந் தேதி முதல் 24ந் தேதி வரை*

***குரோம்பேட்டை*** இந்திரா காட்டன் மில்ஸ் அருகில் ராதா நகர், பட்டேல் தெரு, 13ம் நம்பர் கிருஹத்தில் ***"பக்த விஜயம்"*** என்ற தலைப்பில் ***"பாண்டுரங்க பக்தர்"***களைப் பற்றி ஸ்ரீ குருஜியின் உபன்யாஸம் நடைபெறும்.

✡ ✡ ✡

## ஜுன் 25ந் தேதி முதல் ஜுலை 1ந் தேதி வரை

மயிலாப்பூர் கேசவப் பெருமாள் கோயில் தெரு, ***'பக்தர்கள் சேவா அறக்கட்டளை'*** சார்பில் காஞ்சி ஸ்ரீ மஹா பெரியவாள் ஜயந்தியை முன்னிட்டு ஸ்ரீ குருஜியின் ***'பக்த விஜயம்'*** உபன்யாஸம் நடைபெறும்.

✡ ✡ ✡

## ஜுன் 29ந் தேதி – வைகாசி அனுஷம்

மாதாந்திர ***'அத்வைத ஸித்தி வாக்யார்த்த ஸதஸ்'*** நடைபெறும்.

---

அறிவிப்பு 1 :

பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் ''அருணாசல அக்ஷர மண மாலை'' - ஸ்ரீ குருஜியின் உபன்யாஸக் கேஸட்டுகள் - (மூன்று பாகங்களும்) ப்ரேமிக பவனில் விலைக்குக் கிடைக்கும்.

---

அறிவிப்பு 2 :

'மதுரமுரளி' பத்திரிகை ஆரம்பித்து இந்த இதமுடன் ஒரு வருஷம் பூர்த்தியாகிறது. சந்தாதாரர்கள் அடுத்த வருஷத்திற்கான தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

---

அறிவிப்பு 3 :

Reproduction of any article from `**MADURAMURALI**' requires prior permission of Sri Guruji.

✡ ✡ ✡

மதுரமுரளி மாத இதழிற்கு சந்தாதாரர்கள் வரவேற்கப்படுகிறார்கள். வருஷச் சந்தா ரூ.60/- தனிப் பிரதி ரூ.5/-

டிமாண்டு டிராப்டை 'குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்' என்ற பெயரில் வாங்கி, உறை மீது

மதுரமுரளி
**V. சங்கரன்,**
5/3, MIG Flats
பி.டி. ராஜன் ரோடு,
கே.கே. நகர், சென்னை - 600 078
தொலை பேசி எண் : 4840527

என்ற விலாசத்திற்கு அனுப்பவும்.

மணியார்டர் மூலமும் மேற்கண்ட விலாசத்திற்கு அனுப்பலாம்.

மிஷன் சார்பில் ''சாந்தீபனி குரு குலம்'' என்ற டிரஸ்டின் கீழ் சாமவேத பாடசாலையும், யஜுர் வேத பாடசாலையும் சென்னை வளசரவாக்கத்தில் நடைபெறுகின்றன. பாடசாலைக்கு நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பும் நன்கொடைகளுக்கு வருமான வரி விலக்கு உண்டு. பாடசாலைக்கு வித்யார்த்திகளையும், 'மதுரமுரளி' இதழுக்கு சந்தாதாரர்களைச் சேர்த்தும், விளம்பரங்களை அனுப்பி வைத்தும் உதவக் கேட்டுக் கொள்கிறோம்.

***மங்களானி பவந்து***


மதுரமுரளி

Registered as Newspaper in India

R. No. 62828/95
Single Copy Rs. 5/-

Regd. No. TN/MS/(S)/714
Annual Subs. Rs. 60/-

| வேணு : 1 | ஜுன் 1996 | கானம் : 11 |
|---|---|---|



Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Madras 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Madras - 600 014. Editor : S. Sridhar